# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2097/33 - 2018 නොවැම්බර් මස 15 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.11.15

2097/33 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KEG/LAN/AQUIS/A3/1/112.

கேகாலை பஸ் டிப்போ மீளமைக்கப்பட்ட வாய்க்காலை அபிவிருத்தி செய்வதற்காக இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள காணித்துண்டுகளை எடுத்துக்கொள்ள அரசாட்சியாளர் எண்ணியிருக்கிறார்கள், என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணத்தில், கேகாலை மாவட்டத்தில், கேகாலை பிரதேச செயலாளர் பிரிவில், வல்தெனிய கிராம அலுவலர் பிரிவில் (கேகாலை பிரதேச சபை எல்லையினுள்) அமைந்துள்ள கேகாலை நில அளவை அத்தியட்சகரின் ஆ. வ. கே. 3606 ஆம் இலக்கம் கொண்ட வரைபடத்தில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 02 காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:

**ஆ. வ. ப. கே. 3606 வரைபடத்தில்**

**துண்டு இல. 01**

காணியின் பெயர்: ஏதண்டேவெல எனும் வேகன்தலே கும்புர ; விஸ்தீரணம் :0.0073 ஹெக்டயார்.

**துண்டு இல. 02**

காணியின் பெயர் : ஏதண்டேவெல எனும் வேகன்தலே கும்புர ; விஸ்தீரணம் : 0.0092 ஹெக்டயார்.

உரித்துக் கோருவோரின் பெயர் மற்றும் முகவரி :-

01. டப். ஏ பிரேமாவத்தீ,
இலக்கம் 172,
பிஸ்கல் வத்தை,
பரகம்மன.

**பரிசீலனைத் திகதி :**

கே. 01 - 02 வரையிலான இலக்கங்கள் திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி மு. ப. 9.30 மணியிலிருந்து.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு உரித்து, உரிமை அல்லது வேறு எவையேனும் தொடர்புகள் கொண்ட அனைவரும் தத்தமது


1A - G 28963- 22 (2018/11)

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

அல்லது அவர்களின் பத்திரங்கள் மூலம் அதிகாரமளிக்கப் பட்டவர்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தினங்களில் மற்றும் நேரங்களில் கேகாலை பிரதேச செயலகத்தில் என்னை சந்தித்தல் வேண்டும்.

மேலும், 2018 மாதம் 25 ஆம் திகதிக்கு முன் குறித்த காணி சம்பந்தமாக அவர்களின் உரித்துக்களின் தன்மைகள், குறித்த காணியைப் பெற்றுக்கொள்வதற்காக நட்டஈடு வேண்டுவதற்கு இருக்கின்ற விடயங்கள் சம்பந்தமான விபரங்களையும், நட்டஈட்டுத் தொகை மற்றும் அத்தொகையினைக் கணக்கிட்டவிதம் போன்ற வற்றினையும் இரண்டு பிரதிகள் கொண்ட பத்திரம் மூலம் எனக்கு அறியத்தருதல் வேண்டும்.

கே. ஜீ. எஸ். நிஷாந்த,
பிரதேச செயலாளர்/
காணி எடுத்தல் அலுவலர்,
கேகாலை.

பிரதேச செயலகம்,
கேகாலை,
2018, நவெம்பர் 12.

11 - 1291